2018 ஜூலை 4] [திரு. துரைமுருகன்]

கல்வித் துறையிலே, பல பல்கலைக்கழகங்களில் established *ஆக இருக்கக்கூடிய ஒன்று, அதை எடுத்துவிட்டு இதை மாற்றுகிறார்களே, அதற்கு என்ன காரணம்? அதைத்தான் நான் தெரிந்துகொள்ள வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், நீங்கள் பதில் சொல்கிறீர்களா? சரி, சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசானது ஒரு முடிவெடுத்து, இன்றைக்கு கல்வியில் மட்டும் கவனம் செலுத்துகின்ற வகையில், இந்திய உயர் கல்வி ஆணையம் என்பதைத் தோற்றுவிப்பதற்காகவும், அதேநேரத்தில் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலமாக மானியத்தை விடுவிப்பதற்காகவும் அவர்கள் இந்தச் சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, கல்வி சார்ந்த வகையிலே,* U.G.C.*–யோடு ஒருங்கிணைந்து அவர்கள் செயல்பட்டதை மாற்றியமைக்கின்ற வகையிலேதான் இந்தச் சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். அதற்கு அழுத்தம் கொடுக்கின்ற வகையிலேதான் 7 ஆம் தேதி வரை அனுமதி தந்திருக்கிறார்கள். 7 ஆம் தேதிக்குள்ளாக 13 பல்கலைக்கழகங்களினுடைய துணைவேந்தர்களுடனும், கல்வியாளர்களுடனும் ஆய்வுகளை மேற்கொண்டு, அதன் மூலமாக உரிமைகள் எந்தவிதத்திலும் பறிக்கப்படாதவண்ணம் தொடர்ந்து உயர் கல்விக்கு அவர்கள் வழங்கிய மானியத்தைப் பெறுகின்ற வகையிலேதான் அரசானது முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைச் சுட்டிக்காட்டி, அதேவேளையில் எந்தவிதத்திலும் பாதிப்புகள் இல்லாமல் பாதுகாக்கின்ற அரசாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே வந்த அரசு இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் கோடிட்டுக் காட்டியிருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(இ) பறக்கும் இரயில் திட்டத்தை பரங்கிமலை வரை நீட்டிக்கும் பணியை விரைவாக முடிக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கடற்கரை முதல் மயிலாப்பூர் வரை 260 கோடி ரூபாய் மதிப்பில் 9 கிலோ மீட்டர் நீளத்திற்கு*

அமைக்கப்பெற்ற பறக்கும் இரயில் திட்டத்தை முதல் கட்டமாக கடந்த 1997 ஆம் ஆண்டு எங்களுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இரண்டாவது கட்டமாக மயிலாப்பூரிலிருந்து வேளச்சேரி வரை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், விவாதம் அல்ல, நீங்கள் விதி எண் 55—ன்கீழ் கொடுக்கும் விவரத்தைக் கேளுங்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் அனுமதித்திருக்கிறேன். கேள்வி கேளுங்கள்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், ஒவ்வொருவருக்கும் இரண்டு நிமிடங்கள் என்று சொன்னால் நான் நிறைய உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தர முடியாது.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், முக்கியமான கருத்துதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அதற்குப் பிறகு கேளுங்கள்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,625 கோடி ரூபாய் மதிப்பில் 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்ட பறக்கும் இரயில் திட்டத்தை கடந்த 2006 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அவ்விழாவில் வேளச்சேரி வரை இயக்கப்பட்டு வரும் பறக்கும் இரயிலை பரங்கிமலை வரை, 417 கோடி ரூபாய் மதிப்பில் நீட்டித்துத் தரப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இப்புதிய இரயில் பாதை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டபோது, இப்பணிக்குத் தடையாக ஆதம்பாக்கம் ஏரியில் ஆக்கிரமிப்பில் இருந்த 120 குடிசைகளை அப்புறப்படுத்தி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேளுங்கள். இப்போது மூன்று கிலோ மீட்டர், அதற்கு விளக்கம் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? என்ன வேண்டும் என்பதைக் கேளுங்கள். அதோடு உட்காருங்கள்.

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் மூன்று கிலோ மீட்டர் அளவிற்கு நீட்டிப்பினை அறிவித்தார்கள். அதில் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் 2½ கிலோ மீட்டர் போட்டிருக்கிறோம். எட்டு வருடங்களாக ½ கிலோ மீட்டர் அளவிற்கு இன்னும் போடப்படாமல் அந்தத் திட்டம் அப்படியே முடங்கிப் போயிருக்கிறது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்டால் மூன்று இரயில் முனையங்களும் பரங்கிமலைக்கு வரும். தென்னக இரயில், பறக்கும் இரயில், மெட்ரோ இரயில் ஆகிய மூன்று இரயில் நிலையங்களும் அந்தப் பகுதிக்கு வந்தால் இலட்சக்கணக்கான மக்கள் நிச்சயமாகப் பெரிய அளவிலே பயன் பெறுவார்கள். ஆக, இந்த அரசு உடனடியாக ½ கிலோ மீட்டர் அளவில் இருக்கிற பணியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், போதும் உட்காருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–35

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கடற்கரை முதல் வேளச்சேரி வரை பெருநகர துரித இரயில் விரிவாக்கத் திட்டம்–*II *ஏப்ரல் மாதம் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் இருந்தன. வேளச்சேரியிலிருந்து தோமையார் மலை வரையிலான ஐந்து கிலோ மீட்டரில் மூன்றரை கிலோ மீட்டர் போடப்பட்டுவிட்டது. மீதமிருக்கின்ற ஒன்றரை கிலோ மீட்டருக்கு, இத்திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்துதல் சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்குகளில் உயர் நீதிமன்றம் 5-8-2015 ஆம் நாளிட்ட ஆணையில் நில உரிமையாளர்களுக்கு புதிய நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 2013–ன்படி இழப்பீடு வழங்க ஆணையிட்டது. அதன்படி,* Award *எண் 1/2016, நாள் 20–9–2016–ன்படி, அந்நில உரிமையாளர்களுக்கு 80 சதவிகித இடைக்கால இழப்பீடு வழங்கப்பட்டது. இருப்பினும் புதிய சட்டத்தின்படி வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை கணக்கீட்டில் கொள்ளப்பட்ட நில மதிப்பீட்டுக்குக் குறைவாக இருப்பதால், நில உரிமையாளர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்துள்ளனர். இதில், உயர் நீதிமன்றம் மேற்கண்ட* Award*–க்கு இடைக்காலத் தடை விதித்து ஆணையிட்டது. மேற்காணும் வழக்குகளில் இழப்பீடு வழங்குவது குறித்த விசாரணை*

முடிவுற்றிருக்கிறது. இறுதித் தீர்ப்பு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. இறுதித் தீர்ப்பை விரைவில் பெற்றவுடன், மனுதாரர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கி, நிலங்களைக் கையகப்படுத்தி, இப்பகுதி மக்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரைந்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இடையில் இவ்வழக்கு நீதிமன்றத்திலே இருப்பதனால் தாமதமாகியிருக்கிறது. தீர்ப்பு வந்தவுடன் இழப்பீடு வழங்கப்பட்டு பணி விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன்.

(ஈ) துறைமுகம் தொகுதி, கழிவுநீரேற்று குழாய்களைப் பெரிதாக்கி கழிவுநீரேற்று நிலையங்களைத் தரமுயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நான் தகவல் கோரல் என்ற முறையில்தான் அனுமதித்திருக்கிறேன். சுருக்கமாக உரையை முடியுங்கள்.*

திரு.பி.கே.சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சுருக்கமான முறையில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கழிவுநீரேற்றும் நிலையங்கள் மொத்தம் 6 இருக்கின்றன. அந்த 6–ல், 150 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஜட்காபுரம் கழிவுநீரேற்றும் நிலையம், 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட சட்டக் கல்லூரி கழிவுநீரேற்றும் நிலையம், 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ரிசர்வ் வங்கி கழிவுநீரேற்றும் நிலையம் ஆகிய 3 கழிவுநீரேற்றும் நிலையங்கள் வாயிலாகத்தான் துறைமுகப் பகுதியிலே வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் செல்கின்றது. இதனால் மின்ட் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய 20 தெருக்களிலும், வால்டாக்ஸ் ரோடு பகுதிகளை உள்ளடக்கிய 20 தெருக்களிலும் தினந்தோறும் காலையிலிருந்து மாலை வரை வெளியேற்றப்படும் கழிவுநீர் அப்படியே தேங்குகிறது. கழிவுநீர் மாலைக்குப் பிறகுதான் வெளியேற்றப்படுகின்றது. நாங்கள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் சொன்னவுடன் அவர்களும் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால், நிரந்தரத் தீர்வாக அந்தக் கழிவுநீரேற்றுக் குழாய்களைப் பெரிதுபடுத்த வேண்டும். 100 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட கழிவுநீர்க் குழாய்கள், 40 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட கழிவுநீர்க் குழாய்கள் ஆகியவற்றை பெரிதுபடுத்தி கழிவுநீரேற்று நிலையங்களை மேலும் தரமுயர்த்தினால்தான் அந்த*